பக்கங்கள்: 07

காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 10 புதன்கிழமை 28.09.2022 கதிர் 214

## காகமும் யானையும் அரசியல் கல்யாணம்

### கலாய்க்கின்றார் சஜித்



காகம் - யானை கூட்டணியேதற்போது நாட்டை ஆள்கின்றது. அதாவது, காகத்துக் கும் (மொட்டுக் கட்சி), யானைக்கும் 2

# அரசுக்குப் பதில் வழங்க உரிய நேரத்தில் தேர்தல்

### ஆணைக்குழுவிடம் பேராயர் வேண்டுகோள்



வானுயர கோபுரம் அமைக்கப்பட்ட நாட்டில், பட்டி னியால் பிள்ளைகள் மயங்கி விழுகின்றனர். முறை யற்ற அபிவிருத்தி நடவடிக்கைகளால் உலகம் முழுதும் கையேந்த வேண்டிய நிலையில் நாடு உள் ளது. எனவே, ஆட்சியாளர்களுக்குப் பதிலளிப்பதற்கு உரிய நேரத்தில் தேர்தல் நடத்தப்பட வேண்டும். 2

## திலீபனை நினைவேந்தியோரை உடனே சிறைக்குள் தள்ளுங்கள்

### அரசிடம் விமல் எம்.பி. வலியுறுத்து



மரணித்த புலிப் பயங்க ரவாதியான திலீபனை வடக்கு, கிழக்கில் பகிரங்கமாக நினை வேந்தியவர்களை உடனடியா கச் கைதுசெய்து சிறையில் அடைக்க வேண்டும்.

- இவ்வாறு அரசிடம் வலியு றுத்தியுள்ளார் முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச.

இதுதொடர்பில் ஊடகங்களி டம் அவர் மேலும் தெரிவித்த தாவது:-

தமிழீழவிடுதலைப்புலிகள் இந்த நாட்டில் 2

## ஷின்சோ அபேவுக்கு ரணில் இறுதி அஞ்சலி



ஜப்பான் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேயின் இறுதிச் சடங்கில் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டார். 2

## கொழும்பில் தீ விபத்து; 80 வீடுகள் எரிந்து நாசம்

### 220 பேர் இடம்பெயர்வு



கொழும்பு - 15, முகத்து வாரம், கஜீமா தோட்டத்தில் ஏற்பட்ட தீ விபத்தால் 80 வீடு கள் எரிந்து நாசமாகியுள்ளன.

நேற்றிரவு 7.30 மணி யளவில் குடியிருப்பில் 2

### தம்புத்தேகம கொள்ளை முயற்சி:

## இடைநிறுத்தப்பட்டார் 'மொட்டு' உறுப்பினர்!

தம்புத்தேகம நகரில் 223 இலட்சம் ரூபா பணத்தைக் கொள்ளையிட முயற்சித்த வர்களுக்கு உதவியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் இராஜாங்கனை பிரதேச சபை யின் ஸ்ரீலங்கா பொதுஜன பெர முன உறுப்பினரின் கட்சி 2

## மக்களின் அடுத்த போராட்டம் மிகப்பயங்கரமாக இருக்கும்!

### அரசுக்குக் கம்மன்பில எம்.பி. எச்சரிக்கை



பட்டினி மற்றும் மருந்துத் தட்டுப்பாட்டால் மக்கள் போராட்டம் வெடிக்கும் பட்சத்தில், அது பயங்கரமான போராட்டமாக அமையும் என்ற எச்சரிக்கையை அரசுக்கு விடுக்கின்றோம். 2

## டலஸ் அணியினருடன் முக்கிய புள்ளி சங்கமம்



தேசிய இளைஞர் சேவை கள் மன்றம் மற்றும் தேசிய லொத்தர் சபை ஆகியவற்றின் முன்னாள் தலைரான சட்டத் தரணி லலித் பியூம் பெரேரா டலஸ், 'சுதந்திர மக்கள் 2

## தேசிய சபையின் முதலாவது கூட்டம்

### நாளை ஆரம்பம்

தேசிய சபையின் ஆரம்ப கூட்டம் நாளை சபாநாயகர் ம ஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற வுள்ளது.

நாடாளுமன்றத்தில் காலை 10.30 மணிக்குக் கூட் டம் ஆரம்பமாகவுள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர் தனவின் பிரேரணையின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்ட தேசிய சபைக்கு நியமிக்கப்பட் டுள்ள நாடாளுமன்ற 2

## தமிழ்க் கட்சியினர் மீது சீறுகிறார் பொன்சேகா



### நெருக்கடி நிலைமையைப் பயன்படுத்தி காரியம் சாதிக்க முயற்சி எனக் குற்றச்சாட்டு

நாடுபொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள நிலையில், அதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி அரசைப் பணயக் கைதியாக்குவதற்கு 2



## தமிழ் மக்களுக்குத் தீர்வை வழங்க ராஜபக்ஷக்கள் தயாராக இருந்தனர்

### கூட்டமைப்பினரே பின்னடித்தனர்; இப்படிக் கூறுகின்றார் நாமல் எம்.பி.

தமிழருக்குத் தீர்வு வழங்க ராஜபக்சக்கள் தயாராகவே இருந்தனர் - புதுக்கதை சொல்கின்றார் நாமல் ராஜபக்ஷக்கள் ஆட்சி யில் இருந்தபோது தமிழ் மக்களுக்குத் 2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## தமிழ் மக்களுக்கு..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்வை வழங்க அவர்கள் தயாராகவே இருந்தார்கள். ஆனால், தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்த விடயத்தில் பின்னடித்தார்கள்.

- இவ்வாறு முன்னாள் அமைச்சரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியிலும், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் ஆட்சியிலும் தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இதற்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை. அவர்கள் எதிர்க்கட்சிகளுடன் கை கோர்த்து ராஜபக்ஷக்களின் ஆட்சியைக் கவிழ்க்கவே பாடுபட்டார்கள்.

அன்றும் சரி, இன்றும் சரி வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், தமிழ் மக்களின் நலனில் அக்கறையின்றிச் செயற்படுகின்றனர்.

சுயலாப அரசியலே கூட்டமைப்பினரின் இலக்கு. இதைத் தமிழ் மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

அதேவேளை, தெற்கிலுள்ள எதிர்க்கட்சியினரும் சுயலாப அரசியலைக் கருத்தில்கொண்டே செயற்படுகின்றனர். சிங்கள மக்களின் நலன் தொடர்பில் அவர்களுக்கு எந்த அக்கறையும் இல்லை. அதுதான் பிரதமர் பதவியை ஏற்கவும், சர்வகட்சி அரசை நிறுவவும் அவர்கள் பின்னடித்தனர் - என்றார்.

## டலஸ்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபை'யுடன் சங்கமித்துள்ளார். சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகடலஸ்அழகப்பெருமஉள்ளடங்கலான 13 எம்.பிக்கள் இணைந்தே 'சுதந்திர மக்கள் சபை'யை நிறுவியுள்ளனர்.

இந்நிலையிலேயே அவர் மேற்படி சபையுடன் நேற்று இணைந்துள்ளார்.

இந்த நிகழ்வில் டலஸ் அழகப்பெரும, பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், சன்ன ஜயசுமன உள்ளிட்டவர்கள் பங்கேற்றனர்.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவு வழங்கி வந்த முக்கிய புள்ளிகள் அண்மைக்காலமாக டலஸ் தரப்புடன் இணைந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஷின்சோ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் மறைந்த ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேயின் இறுதிச் சடங்கு டோக்கியோவிலுள்ள நிப்பொன் புடோக்கனில் அரச மரியாதையுடன் நேற்று நடத்தப்பட்டது.

இந்த இறுதிச் சடங்கில் அமெரிக்காவின் உப ஜனாதிபதி கமலா ஹரிஸ் உள்ளிட்ட வெளிநாட்டு அரச தலைவர்கள் பலர் கலந்துகொண்டனர்.

இதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினார்.

## கொழும்பில்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரவிய தீ, கொழும்பு தீயணைப்புப் பிரிவினரால் கடும் பிரயத்தனத்துக்கு மத்தியில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

தீ பரவியமைக்கான காரணத்தைக் கண்டறிவதற்காகச் சம்பவ இடத்தில் இன்று இரசாயனப் பகுப்பாய்வு முன்னெடுக்கப்படுகின்றது.

தீக்கிரையான வீடுகளில் வசித்தவர்கள் தற்போது மோதர உயன சனசமூக நிலையம் மற்றும் விகாரையில் தற்காலிகமாகத் தங்கவைக்கப்பட்டுள்ளனர். சுமார் 220 பேர் வரை இடம்பெயர்ந்துள்ளனர்.

## திலீபனை..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பு ஆகும். இந்த அமைப்பில் இருந்து மரணித்தவர்களை யாராவது பகிரங்கமாக நினைவுகூர்ந்தால் அவர்களைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும்.

மரணித்த புலிப் பயங்கரவாதியான திலீபனை வடக்கு - கிழக்கில் 12 நாட்கள் தமிழ் மக்கள் பகிரங்கமாக நினைவேந்தியுள்ளார்கள். திலீபனின் படத்தைத் தாங்கிய ஊர்திப் பவனிகளும் வீதிகளில் வலம் வந்துள்ளன.

சிங்கள மக்களைச் சினமூட்டும் வகையில் தமிழ் மக்களும், தமிழ் அரசியவாதிகளும் நடந்துகொண்டுள்ளார்கள். சமூக வலைத்தளங்களில் கூட திலீ பனைத் தமிழ் இளைஞர்கள் நினைவேந்தியுள்ளார்கள்.

இவ்வாறானவர்களை அடையாளம் கண்டு அவர்களைக் கைதுசெய்து சிறையில் அடைக்க வேண்டும்.

பாதுகாப்பு அமைச்சு இந்த விடயத்தில் மிகவும் அக்கறையுடன் செயற்பட வேண்டும்.

திலீபனின் நினைவேந்தல் நிகழ்வை பொலிஸாரும், படையினரும் ஏன் தடுக்காமல் இருந்தார்கள்? எவரின் உத்தரவின் பேரில் பொலிஸாரும் படையினரும் அமைதி காத்தார்கள்? - என்றார்.

## மக்களின்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு புதிய ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

உணவு மற்றும் மருந்துகளுக்கு எதிர்காலத்தில் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய சூழ்நிலை காணப்படுகின்றது.

வைத்தியசாலையில் மருந்துத் தட்டுப்பாடு நிலவுவதாக வைத்தியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அதேபோல் உண்ண உணவில்லாததால் மாணவர்கள் பாடசாலைகளில் மயங்கி விழுகின்றனர் என்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றார்.

தமது பிள்ளைகளுக்கு சமைத்துக் கொடுக்க வீட்டிலே ஒன்றும் இல்லை என்று தாய்மார் கண்ணீர் வடிக்கின்றனர். எனவே, இந்நிலைமையை மறைப்பதற்கு எவர் முற்பட்டாலும், உணவு மற்றும் மருந்துக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்பது கசப்பான உண்மையாகும்.

எரிபொருள் மற்றும் எரிவாயுவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதால்தான் கடந்த ஏப்ரலில் மக்கள் போராட்டம் ஆரம்பமானது.

உணவு மற்றும் மருந்துகளில்தான் மனித இருப்பு தங்கியுள்ளது. இவை இல்லாவிட்டால் மனிதன் வாழ முடியாத நிலை உள்ளது.

மருந்து இல்லாமல் பெற்றோர் உயிரிழந்தால் பிள்ளைகள் கொதிப்படைவார்கள். உணவு இல்லாமல் குழந்தைகள் உயிரிழந்தால் பெற்றோர் கொதிப்படைடவார்கள். அந்தப் போராட்டங்கள் பயங்கரமானவையாக இருக்கும்.

அதேபோல் நாடு அராஜக நிலைமைக்கும் செல்லும். இருப்பவர்களின் வீடுகள் சுற்றிவளைக்கப்படலாம்.

கொள்ளை அடிக்கப்படலாம். கடைகள் உடைக்கப்படலாம். எனவே, அரசு, மக்களை ஒடுக்க வழி தேடாமல், பிரச்சினைகளுக்குத் தீர்வு தேட வேண்டும் - என்றார்.

## தமிழ்க்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்னேஸ்வரன் உள்ளிட்ட தரப்பினர் முயற்சிக்கின்றனர். இது ஏற்புடைய நடவடிக்கை அல்ல. பிரிவினைவாத நிபந்தனைகளை ஏற்கக்கூடாது.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

புலம்பெயர்தமிழர்கள்இலங்கையில் முதலிடுவதற்குத் தயாராகவே உள்ளனர். அது நடக்க வேண்டுமானால் சில நிபந்தனைகளை நிறைவேற்றப்பட வேண்டும் என்று தமிழ்க் கட்சிகளால் விடுக்கப்பட்டுள்ள அறிவிப்பு தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே பொன்சேகா எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

ஸ்ரீலங்கா டயஸ்போரா என்பதற்குள் தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் என அனைத்து இனத்தவர்களும் உள்ளனர். இந்த அரசு மீது அவர்களுக்கு நம்பிக்கை இருந்தால் முதலீடுகளை மேற்கொள்ளலாம். ஆனால், ஊழல் ஆட்சியெனில் எவரும் முன்வரமாட்டார்கள் என்பதையும் ஏற்றாக வேண்டும்.

இந்த அரசு மீது நம்பிக்கையின்மையால் முதலிட எவரும் முன்வர விரும்புவதில்லை. சாதாரணமாகக் கூட பணம் அனுப்பமாட்டார்கள்.

தற்போதைய நெருக்கடி சூழ்நிலையில், குழம்பிய குட்டையில் மீன்பிடிப்பதற்கு விக்னேஸ்வரன் முயற்சிக்கின்றார். அரசைப் பணயக் கைதியாகப் பயன்படுத்துவதற்கு அவர் முற்படுகின்றார். பிரிவினைவாத நிபந்தனைகளை ஏற்க முடியாது. பெரும்பாலான மக்கள் எதிர்க்கும் அரசியல் காரணிகளையும் அனுமதிக்க முடியாது. இந்த விடயத்தில் நிதிக்காக அரசும் அடிபணிந்துவிடக்கூடாது - என்றார்.

## காகமும்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(ஐக்கிய தேசியக் கட்சி அரசியல் ரீதியில் திருமணம் முடிந்துவிட்டது.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

நாட்டில் அடுத்து எந்தத் தேர்தல் நடத்தப்பட்டாலும் அதனை எதிர்கொள்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவே இருக்கின்றது.

எமது நாட்டு மக்கள் ஜனாதிபதி (கோட்டா), பிரதமர் (மஹிந்த) ஆகியோரை விரட்டினர். காகத்தைக்கூட (பஸில்) விரட்டியடித்தனர். எனவே, தற்போது அமைந்துள்ள அரசானது, மக்கள் ஆணைக்கு முரணானது.

மக்களுக்கு அஞ்சுவதால்தான், தேர்தல்களை நடத்துவதற்கு அரசு நடுங்குகின்றது. பயங்கரவாதத் தடைச் சட்டம் உள்ளிட்ட சட்டங்களைப் பயன்படுத்தி மக்களை ஒடுக்குவதற்கு அரசு முயற்சிக்கின்றது - என்றார்.

## தேசிய சபையின்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்களின் பட்டியலை செப்டெம்பர் 23ஆம் திகதி சபாநாயகர் நாடாளுமன்றத்துக்கு அறிவித்தார்.

தேசிய சபை என்பது அந்தந்த அரசியல் கட்சிகளின் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

## தம்புத்தேகம..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்புரிமை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் இதனைத் தெரிவித்துள்ளார்.

கொள்ளைச் சம்பவத்துக்குப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள், குறித்த பிரதேச சபை உறுப்பினரால் வழங்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தம்புத்தேகம பொருளாதார மத்திய நிலையத்தின் வர்த்தகர் ஒருவர், வங்கியில் வைப்பிலிடுவதற்காகக் கொண்டு சென்ற 223 இலட்சம் ரூபா பணம் மோட்டார் சைக்கிளில் பிரவேசித்த இருவரால் கொள்ளையிடப்பட்டது.

துப்பாக்கியைக் காண்பித்து அச்சுறுத்தி இந்தக் கொள்ளை இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இதன்பின்னர், அவர்கள் தம்புத்தேகம பொலிஸ் நிலையத்தின் கான்ஸ்டபிள் ஒருவரால் வழிமறிக்கப்பட்டு, குறித்த கொள்ளைச் சம்பவம் முறியடிக்கப்பட்டது. அத்துடன் அவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அரசுக்குப்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

நாட்டில் நடுத்தர வர்க்கத்தினர் - மத்திய வருமானம் பெறுபவர்கள் என அடையாளப்படுத்தப்பட்டவர்களும் தற்போது வறுமையின் பிடிக்குள் சிக்கியுள்ளனர்.

பாரிய பெருந்தெருக்கள் அமைக்கப்பட்டன. வானுயர கோபுரங்கள் அமைக்கப்படுகின்றன. விமான நிலையம் நிர்மாணிக்கப்பட்டது. ஆனால் விமானம் வருவதில்லை. நாட்டு மக்களுக்கு ஒருவேளை உணவுகூட பெரும் சவாலாக மாறியுள்ளது.

சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்காக நத்தார் காலத்தில் கொழும்பைச் சொர்க்கபுரியாக்கப்போகின்றார்களாம். ஆனால், நாட்டு மக்களுக்கு உண்பதற்கு உணவு இல்லை. அறநெறி பாடசாலைக்கு வரும் மாணவர்கள் மயங்கி விழுகின்றனர். உலகம் முழுவதும் கையேந்தப்படுகின்றது. எனவே, போலி நடவடிக்கைகள் வேண்டாம்.

அதேவேளை, உள்ளூராட்சி சபைத் தேர்தல் அடுத்த வருடம் மார்ச் மாதம் கட்டாயம் நடத்தப்பட வேண்டும். அரசியல் அழுத்தங்களுக்கு பணிந்து தேர்தலைப் பிற்போட வேண்டாம் என தேர்தல் ஆணைக்குழுவிடம் கேட்டுக்கொள்கின்றோம். தேர்தல் என்பது எமக்கான உரிமை. அரசுக்குப் பதிலளிக்க வாய்ப்பு வேண்டும் - என்றார்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மைத்திரி விடும் கதை

தற்போதைய பிரச்சினைகள் எதுவும் தமது ஆட்சிக் காலத்தில் இருக்கவில்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே முன்னாள் ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் –

“அப்போது பொருள்களின் விலை குறைவாகவும், சம்பளம் அதிகமாகவும் இருந்தது. மக்கள் கடவுளின் உதவியால் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

“இப்போது இந்த இக்கட்டு நேரத்திலும் அனைத்துக் கட்சி அரசு உருவாகவில்லை. எனவே, மிகவும் முற்போக்கான கட்சிகளை ஒன்று திரட்டி கூட்டமைப்பை உருவாக்கி மக்கள் நேய ஆட்சியை உருவாக்குவேன் என நம்புகிறேன்.” – என்று அவர் கூறியிருக்கின்றார்.

அவர் கூறுவது உண்மைதான். ஆனால் விளைவுகளைப் பற்றிக் கூறாமல், விடயங்களைப் பற்றி மட்டும் பிரஸ்தாபித்து, தாம் சாதித்தது ஏதோ சாதனை என்று காட்டப் பார்க்கிறார் அவர். அங்குதான் அவரது அரசியல் புரட்டுத்தனம் புதைந்து கிடக்கிறது.

இப்போது சர்வ கட்சி அரசு ஏற்படாதமை குறித்து முதலை கண்ணீர் வடிக்கும் அவர், 2014 இறுதியில் எதிர்க்கட்சிகள் தங்களின் ஏக ஜனாதிபதி வேட்பாளராக அவரைத் தேர்ந்தெடுத்து, ஒன்றுபட்டு, கஷ்டப்பட்டுப் பணியாற்றி, அவரை நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக மட்டும் தெரிவு செய்யவில்லை, அதையும் தாண்டி, ஏறத்தாழ சர்வ கட்சி அரசு அல்லது தேசிய அரசு போன்ற ஒன்றையும் சேர்த்து அவரது கைகளில் அளித்தனர்.

இலங்கையின் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத அபூர்வ – அற்புத – அதிசய – நிகழ்வாக நாட்டில் இரண்டு பெரிய கட்சிகளும் இணைந்து ஓர் அரசை ஏற்படுத்தி, அவருக்குப் பக்கபலமாக அமைந்தன.

அவற்றை வைத்து இன்று தம்மைத் தாமே பீற்றிக் கொள்ளும் மைத்திரியார் அன்று என்ன வெட்டிப் பிடுங்கினார்?

அந்தப் பிரதான கட்சிகளுக்கு இடையே தனது சின்னத்தனமான அரசியலைப் புகுத்தி விளையாடினார். ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அரசியல் தலைமையைத் தமது நிறைவேற்றதிகார ஜனாதிபதி அதிகாரத்தையும், வலிமையையும் பயன்படுத்திப் பிடுங்கி எடுத்து, ஒன்றுபட்டு அரசமைத்திருந்த இரண்டு பிரதான கட்சிகளுக்கும் இடையில் மூன்றாம் தர அரசியலை நடத்தினார். அதன் மூலம் மூன்றாவது பிரதான கட்சியாக பொதுஜன பெரமுன தோன்றி எழுச்சி பெற இடமளிக்கும் அரசியல் முட்டாள்தனத்தை இவரே புரிந்தார்.

அது மாத்திரமல்ல, நாட்டின் தேசிய இனப் பிரச்சினைக்கு இணக்க தீர்வு எட்டுவதற்கான அபூர்வமான வாய்ப்பைத் தமது கீழ்த்தரமான அரசியல் அணுகுமுறைகள் மூலம் போட்டடித்துக் குழப்பினார்.

அப்படி அதிசயமாகக் கிட்டிய வாய்ப்பைக் குழப்பிப் போட்டடித்ததன் விளைவு இன்றைய நிலைக்கு நாட்டை இழுத்துச் சென்றது என்பது கண் கூடு.

தேசிய இனப் பிரச்சினைக்கு மாத்திரமல்ல, பொருளாதார நெருக்கடிகளுக்கும் தீர்வு காண்பதற்கான அற்புதமான வாய்ப்பாக வழங்கப்பட்ட நல்லாட்சி அரசை – நல்லிணக்க அரசை – அரசியல் சின்னத்தனம் பண்ணி குழப்பி அடித்து விட்டு, இப்போது ஒன்றும் தெரியாத அப்பாவி போல கதை விடும் மைத்திரியாரும் இக்குழப்பங்கள் எல்லாவற்றுக்கும் சூத்திரதாரிதான். அதை அவர் மறைக்க முடியாது.



## மக்கிய பெட்டியிலிருந்து சட்டங்களை எடுத்து அரசாங்கம் மக்களை அடக்க முனைகின்றது!

### பீரிஸ் குற்றச்சாட்டு

64 வருட கால சட்டத்தை மக்கிய பெட்டியில் இருந்து எடுத்து மக்களை ஒடுக்குவதற்கு தற்போதைய அரசாங்கம் பயன்படுத்துவதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சொந்த மக்களை அடக்கும் திட்டத்தின் நேரடி விளைவாக, சர்வதேச சமூகத்தின் முன்பாக இலங்கை சிக்கலில் மாட்டியுள்ளது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர் –

இந்த செயற்பாடுகளுக்கு எதிராக எதிர்க் கட்சிதரப்பில் இருந்து அதிகபட்ச முயற்சியுடன் செயற்படுவேன் எனக் கூறியுள்ளார்.

நாட்டில் உயர் பாதுகாப்பு வலயங்களைப் பிரகடனப் படுத்தியமை மூலம் சுற்றுலா பயணிகள் கூட வர முடியாத சூழல் ஏற்பட்டுள்ளதாக ஜி.எல்.பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அடக்குமுறைகள் அனைத்தும் மக்களை வாயடைக்கச் செய்யப்படுகின்றன எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

இதேவேளை நாட்டில் நிலவும் போசாக்கு குறைபாடு, உணவு, மருந்து தட்டுப்பாடு குறித்த தகவல்களை வெளியிடும் அதிகாரிகளை கூட விசாரணை எனக் கூறி அழைத்து வந்து மிரட்டப்படுகின்றனர் எனவும் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

## இராணுவத்தின் 73 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சிறப்பு இஸ்லாமிய வழிபாடுகள்!



இராணுவத்தின் 73 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கொள்ளுப்பிட்டி ஜும்மா பள்ளிவாசலில் திங்கட்கிழமை இராணுவ அதிகாரிகள், சிப்பாய்கள் மற்றும் இஸ்லாமிய மத முக்கியஸ்தர்களின் பங்கேற்புடன் இராணுவத்திற்கு ஆசி வேண்டி சிறப்பு இஸ்லாமிய மத வழிபாடுகள் இடம்பெற்றன.

பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியன, பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவர் அல்-ஹாஜ் மொஹமட் கலீல், செயலாளர் மற்றும் கொள்ளுபிட்டிய ஜும்மா பள்ளி வாசல் நிர்வாக சபை சபையின் உறுப்பினர்கள், இராணுவ முஸ்லீம் சங்க தலைவர் பிரிகேடியர் அஷ்கர் முத்தலிப் ஆகியோரால் வரவேற்கப்பட்டார்.

பின்னர் இஸ்லாமிய மத மரபுகளுக்கமைய அலங்கரிக்கப்பட்ட புனித பகுதியில் வழிபாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. நாட்டின் நலன்களுக்காக இராணுவத்தின் சேவைகளைப் பாராட்டி இஸ்லாமிய மத பிரசங்கமான ‘பயான்’ மௌலவி இர்ாட் ஹில்மினால் நிகழ்த்தப்பட்டதுடன் இராணுவக் கொடிக்கு துஆ பிரார்த்தனை செய்தல், மௌலவி ஏ.பி.எம். ரிஸ்வான கிராத் ஓதல் என்பன இடம்பெற்றன.

அதே சந்தர்ப்பத்தில், கொள்ளுப்பிட்டி ஜும்மா பள்ளி வாசல் நிர்வாக சபைத் தலைவர் இராணுவத் தளபதிக்கு சிறப்பு நினைவு பரிசை வழங்கினார்.

இதேபோல், பள்ளி வாசல் நிர்வாக சபை உறுப்பினர் புனித அல் குர்ஆனை இராணுவத் தளபதிக்கு நல்லெண்ணத்தின் அடையாளமாக வழங்கினார். வழிபாடுகளின் நிறைவம்சமாக இராணுவத்தின் சகல உறுப்பினர்கள் சார்பிலும் பள்ளிவாசல் மேம்பாட்டுக்காக இராணுவத்தின் நன்கொடையும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

## 10 வீத தள்ளுபடியுடன் டொலர்களுக்கு வீடுகள்!

நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான வீடுகளை டொலர்களுக்கு விற்பனை செய்யும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தின் கீழ் டுபாயில் பணிபுரியும் இலங்கையர் ஒருவர் முதலாவது வீட்டை கொள்வனவு செய்துள்ளார் என அமைச்சு தெரிவித்துள்ளது.


நகர அபிவிருத்தி அதிகார சபையால் நிர்மாணிக்கப்பட்ட நடுத்தர வருமான வீடுகளை இலங்கையர்கள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள தொழிலாளர்களுக்கு டொலர் செலுத்தி கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இவ்வாறு பெற்றுக்கொண்டால் 10 வீத தள்ளுபடி வழங்கவும் முடிவு செய்யப்பட்ட நிலையில் 40 ஆயிரம் டொலர்களை செலுத்தி குறித்த வீட்டை கொள்வனவு செய்துள்ளார் என நகர்ப்புற அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

டுபாயில் பணிபுரியும் இலங்கையர் ஒருவர் வியாட்புர வீடமைப்புத் தொகுதியில் 02 படுக்கையறைகள் கொண்ட வீடொன்றை நேற்று (செவ்வாய்க்கிழமை) கொள்வனவு செய்து அதன் பெறுமதி ஒரு கோடியே 58 லட்சம் ரூபா என அறிவிக்கப்பட்டுள்ளது. குறித்த வீட்டை டொலர்களில் கொள்வனவு செய்யும் போது 10 வீத தள்ளுபடி வழங்கியதன் அடிப்படையில் ஒரு கோடியே 42 லட்சம் ரூபாவிற்கு அந்த வீட்டைக் கொள்வனவு செய்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு







# அகதிகளின் படகு கவிழ்ந்ததில் 100 லெபனான் பிரஜைகள் சாவு

டமாஸ்கஸ், செப்.28

சிரிய கடற்பரப்பில் அகதிகள் படகு கவிழ்ந்ததில் குழந்தைகள் உள்பட 100பேர் உயிரிழந்துள்ளனர் மேற்காசிய நாடான லெபனானில் உள்நாட்டு போர், பொருளாதார நெருக்கடி ஆகிய காரணங்களால் வறுமை அதிகரித்துவரும் நிலையில் அங்குள்ள ஏராளமானோர் அகதிகளாக ஐரோப்பிய நாடுகளுக்கு புலம்பெயர்ந்து செல்கின்றனர். அவ்வாறு செல்கின்றவர்களில் மத்திய தரைக் கடலில் சட்டவிரோதமாக படகுகளில் செல்லும் பலர், விபத்துக்களில் சிக்கி உயிரிழக்கின்றனர்.

கடந்த வாரம் 150 பேருடன் லெபனானில் இருந்து சென்ற படகு, அதன் அண்டை நாடான சிரியாவின் கடற்கரை நகரான டார்டவுஸ் அருகே நடுக்கடலில் கவிழ்ந்தது.

உடனடியாக 20 பேர் உயிருடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். கடலில் மூழ்கியவர்களை தேடும் பணியில், இதுவரை 10 குழந்தைகள் உட்பட 100 உடல்கள்மீட்கப்பட்டுள்ளனமற்றவர்களைதேடும்பணிகள் தொடர்கிறதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# உக்ரைன் சிப்பாய்க்கு ரஷ்யாவில் சித்திரவதை

## மொஸ்கோவின் நாஸிஸம் எனக் குற்றச்சாட்டு





உக்ரைன் இராணுவ வீரரைச் சிறைப்பிடித்த ரஷ்யா, அவரைச் சித்திரவதைக்குள்ளாக்கித் துன்புறுத்தியுள்ளதாக உக்ரைன் குற்றம் சாட்டியுள்ளது. ரஷ்ய பிடியில்இருந்து தப்பிய அந்த வீரரின் படம் தற்போது வெளியாகியுள்ளமையால் இது மேலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

உக்ரைன் வீரர்கள் ரஷ்ய ராணுவத்துக்கு எதிராகத் தாக்குதல்களை நடத்தி இழந்த பகுதிகளை மீட்டு வருகின்றனர். மேலும், ரஷ்யாவின் போர் குற்றங்களை உக்ரைன் அவ்வபோது வெளியிட்டும் வருகின்றது.

அந்த வகையில் ரஷ்யாவால் சிறைப்பிடிக்கப்பட்ட உக்ரைன் வீரரின் தற்போதைய நிலையைப் படமாக உக்ரைன் வெளியிட்டுள்ளது. ரஷ்யாவில் துன்புறுத்தப்பட்ட அந்த வீரர், ரஷ்ய பிடியில் இருந்து தப்பியுள்ளார். எலும்பும் தோலுமாக அவர் பரிதாபமாகக் காட்சியளிப்பது வேதனை அளிப்பதாக பலரும் கருத்து தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து உக்ரைன் பாதுகாப்புத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'உக்ரேனிய சிப்பாய் மைக்கைலோ டியானோவ் அதிர்ஷ்டசாலிகளில் ஒருவர். அவரது சக போர்க் கைதிகள் சிலர் இன்னும் ரஷ்யாவின் பிடியில் இருக்க, இவர் ரஷ்ய சிறையிலிருந்து தப்பினார். போர் கைதிகள் குறித்த ஜெனிவா உடன்படிக்கைகளை ரஷ்யா இப்படித்தான் கடைப்பிடிக்கிறது. நாஸிஸத்தின் வெட்கக்கேடான பாரம்பரியத்தை ரஷ்யா இப்படித்தான் தொடர்ந்து வருகிறது' எனத் தெரிவித்துள்ளது.

# கியூபாவில் ஓரின சேர்க்கையாளர்களின் திருமணத்துக்கு மக்கள் திரண்டு ஆதரவு

## வாக்கெடுப்பின் பின்னர் சட்டம் நிறைவேற்றம்







ஹவானா, செப்.28

கியூபாவில் ஓரின சேர்க்கையாளர்கள் திருமணத்துக்கு சட்டப்பூர்வ அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. சர்வஜன வாக்கெடுப்பில் மக்கள் அங்கீகாரம் வழங்கியமையால் அரசு ஆதரவுடன் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கம்யூனிஸ்ட் நாடான கியூபாவில் பல ஆண்டுகளாக ஓரின சேர்க்கையாளர்கள் வெளிப்பாடையான பாகுபாட்டை எதிர்கொண்டு வந்தமௌயுடன், 1960களின் முற்பகுதியில் ஓரினச் சேர்க்கையில் ஈடுபடும் ஆண்களும், பெண்களும் துன்புறுத்தப்பட்டு அரசு எதிர்பார்ப்பாளர்களுடன் வேலை முகாம்களுக்குஅனுப்பப்பட்டனர். அதன் பின்னர் 1979 ஆம் ஆண்டு கியூபாவில் ஓரினச் சேர்க்கை சட்டப்பூர்வமாக்கப்பட்டது.

இருந்தபோதிலும் ஓரினச் சேர்க்கையாளர்களுக்கு வெளிப்படையாகவே பாகுபாடு காட்டப்பட்டதாக குற்றச்சாட்டுகள் இருந்தன. கியூபா அரசாங்கத்துக்கு வெளியேயும், உள்ளேயும் ஓரினச் சேர்க்கையாளர்கள் தங்கள் உரிமைகளுக்காகக் கடுமையான எதிர்ப்பை எதிர்கொண்டனர். கடந்த 2018 ஆம் ஆண்டு நாட்டின் புதிய அரசமைப்பில் ஓரினச் சேர்க்கயைாளர்களின் திருமணத்தை சட்டப்பூர்வமாக்கும் விதிகளை சேர்க்க கியூபா அரசு முடிவு செய்த நிலையில், பின்னர் அது

பொதுவாக்கொடுப்பில் பின்னடைவை ஏற்படுத்தும் என அஞ்சி அந்த முடிவைக் கைவிட்டது.

இந்த நிலையில் கியூபாவில் 1975 இல் பிறப்பிக்கப்பட்ட குடும்ப சட்டத்தில் திருத்தம் கொண்டு வர அரசு முடிவு செய்து அதன்படி ஓரினச் சேர்க்கையாளர்கள் திருமணம், வாடகை தாய் மூலம் குழந்தை பெற்றுக் கொள்ளுதல் குறித்த முக்கிய முடிவுகளை உள்ளடக்கிய பொதுவாக்கெடுப்பு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. கியூபாவின் அரசு இந்தச் சட்ட மாற்றத்தை ஆதரித்ததோடு, மக்கள் அதை அங்கீகரிக்க வலியுறுத்தி நாடு தழுவிய பிரசாரத்தையும் நடத்தியது. அதன் பலனாக வரலாற்று சிறப்பு மிக்க இந்த பொதுவாக்கெடுப்பில் மக்கள் ஆர்வத்துடன் பங்கேற்று வாக்களித்தனர். மொத்தம் 74.1 சதவீதம் வாக்குகள் பதிவாகின.

தலைநகர் ஹவானாவில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச்சாவடியில் தனது மனைவியுடன்

சென்று வாக்களித்த கியூபா அதிபர் மிகெல் டயஸ் கேனல், “மக்களிடையே பன்முகத்தன்மையை மேம்படுத்த இது மிகவும் அவசியமான சட்டத்திருத்தம். எல்லா மக்களும் சமம் என்ற உத்தரவாதத்தை வழங்கும் ஒரு மாற்றம் இது என்றார்.

வாக்குப்பதிவு முடிவடைந்ததும் உடனடியாக வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் முடிவுகள் வெளியாகின. அதன்படி 39 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் ஓரின சேர்க்கையாளர்கள் திருமணம் மற்றும் வாடகை தாய் நடைமுறைக்கு ஆதரவாக வாக்களித்தனர். இதன் மூலம் கியூபாவில் ஓரினச் சேர்க்கையாளர்கள் திருமணத்துக்கு சட்டப்பூர்வ அங்கீகாரம் கிடைத்துள்ளது.

அதோடு இந்த சட்டத்திருத்தம் பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்களுக்கு அதிக பாதுகாப்பை வழங்க வழிவகை செய்கிறது.

மேலும், மத குழுக்கள் மற்றும் பழமைவாதிகள் மத்தியில் இந்தச் சட்டத்திருத்தத்துக்கு குறிப்பிடத்தக்க எதிர்ப்பு இருந்தது. சுமார் 19 லட்சம் பேர் ஓரின சேர்க்கை திருமணத்துக்கு சட்டப்பூர்வ அங்கீகாரம் வழங்க எதிர்ப்புத் தெரிவித்து வாக்களித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ‘பொப்புலர் பிரண்ட் ஒவ் இந்தியா’ என்ற இஸ்லாமிய அமைப்பிற்கு 5 ஆண்டு தடை

## இந்திய மத்திய அரசு இன்று அதிரடி உத்தரவு






புதுடெல்லி,செப்.28

‘பொப்புலர் பிரண்ட் ஒவ் இந்தியா’ (பி.எவ்.ஐ.)என்ற இஸ்லாமிய அமைப்பிற்கு 5 ஆண்டுகள் தடை விதித்து இந்திய மத்திய அரசு அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.

பொப்புலர் பிரண்ட் ஒவ் இந்தியா என்ற இஸ்லாமிய அமைப்பு நாட்டில் பயங்கரவாத தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளது, பயங்கரவாதச் செயல்களுக்கு நிதிஉதவி அளிக்கிறது, பயங்கரவாத செயலுக்கு பயிற்சி வழங்குகிறது, பயங்கரவாதச் செயலுக்கு ஆள்களைச் சேர்க்கிறது உள்பட பல்வேறு புகார்கள் எழுந்தன.

இது, தொடர்பாக 15 மாநிலங்களில் 93 இடங்களில் தேசிய புலனாய்வு அமைப்பு, அமுலாக்கத்துறை கடந்த 22 ஆம் திகதி முதல் அதிரடி சோதனை நடத்தியது. இந்த சோதனையில் 106 பேர் கைது செய்யப்பட்டனர். இந்த சோதனைக்கு கண்டனம் தெரிவித்து நடந்த போராட்டத்தில் பல இடங்களில் கல்வீச்சு, வன்முறை சம்பவங்களும் அரங்கேறின. குறிப்பாக, தமிழ்நாடு, கேரளாவில் பெட்ரோல் வீச்சு சம்பவங்களும் அரங்கேறின.

இதனைத் தொடர்ந்து, உத்தரபிரதேசம், மத்திய பிரதேசம், கர்நாடகா, அசாம், டெல்லி, குஜராத், மராட்டியம், தெலுங்கானா ஆகிய 8 மாநிலங்களில் பி.எவ்.ஐ. தொடர்புடைய இடங்களில் நேற்று இரண்டாவது முறையாக சோதனை நடைபெற்றது. இந்த சோதனையின் போதும் பலர் கைது செய்யப்பட்டனர். இந்த இரு சோதனைகளின் போதும் பல்வேறு சர்ச்சைக்குரிய ஆவணங்கள், பணம், டிஜிட்டல் கருவிகள் கைப்பற்றப்பட்டன. இந்நிலையில், பொப்புலர் பிரண்ட் ஒவ் இந்தியா அமைப்பிற்கு மத்திய அரசு இன்று அதிரடி தடை விதித்துள்ளது.

பொப்புலர் பிரண்ட் ஒவ் இந்தியா மற்றும் அதன் துணை அமைப்புகள் சட்டவிரோத அமைப்புகளாக அறிவித்த மத்திய உள்துறை அமைச்சகம் இந்த அமைப்புகள் 5 ஆண்டுகள் இந்தியாவில் செயல்பட தடை விதித்து அதிரடி உத்தரவை பிறப்பித்துள்ளது.

# காங்கிரஸ் தலைவராகும் வாய்ப்பை பறி கொடுக்கின்றார் அசோக் கெலாட்

## அவர் மீது சோனியா கடும் அதிருப்தியில்!

புதுடெல்லி,செப்.28

காங்கிரஸ் தலைவர் பதவிக்கு மல்லிகார்ஜுன கார்கே உள்ளிட்டவர்கள் பெயர் பரிசீலிக்கப்படுவதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

ராஜஸ்தான் முதலமைச்சர் மாற்ற விவகாரத்தில் புயல் வீசுவதால், அசோக் கெலாட் மீது சோனியா கடும் அதிருப்தியில் உள்ளார் எனவும், காங்கிரஸ் தலைவர் பதவிக்கு கார்கே உள்ளிட்டவர்கள் பெயர் பரிசீலிக்கப்படுவதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

‘ஒருவருக்கு ஒரு பதவி’ என்பதில் காங்கிரஸ் கட்சி இப்போது உறுதியாக உள்ளது. ஆனால் காங்கிரஸ் தலைவர் பதவிக்கு போட்டியிட விரும்பும் ராஜஸ்தான் முதலமைச்சர் அசோக் கெலாட் ‘ஒருவருக்கு 2 பதவி’ என்ற கொள்கையை விரும்புகிறார். ஆனால் கட்சி மேலிடமோ அவரை முதலமைச்சர் பதவியில் இருந்து அகற்றி விட்டு அந்தப் பதவியில் சச்சின் பைலட்டை அமர்த்தி அழகு பார்க்க விரும்புகிறது. இது தொடர்பாக ராஜஸ்தான் மாநில காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் கூட்டத்தை நடத்துவதற்காக மேலிட தலைவர்கள் மல்லிகார்ஜுன கார்கேயும், அஜய் மக்கானும் நேற்று முன்தினம் ஜெய்ப்பூர் சென்றிருந்தபோது, கெலாட் ஆதரவாளர்களான 82 எம்.எல்.ஏ.க்கள் மேலிட முடிவுக்கு எதிராக போர்க்கொடி தூக்கினர்.

காங்கிரஸ் தலைவர் தேர்தல் முடிந்த பிறகு, முதலமைச்சர் தேர்வு செய்ய வேண்டும், சச்சின் பைலட்டையோ, அவருடைய ஆதரவாளரையோ அந்த பதவிக்கு தேர்வு செய்யக்கூடாது என்பது உள்பட 3 நிபந்தனைகளை விதித்தனர். இந்த நிபந்தனைகளை தீர்மானமாக நிறைவேற்ற மேலிட பார்வையாளர்களுக்கு அழுத்தம் தந்தனர். இது அரசியல் புயலாக பார்க்கப்படுகிறது.

### சோனியா அதிருப்தி

75 ஆண்டு கால காங்கிரஸ் வரலாற்றில் இப்படி ஒரு புயல் வீசியிராத நிலையில், இது மேலிட பார்வையாளர்களுக்கு அதிர்ச்சியை அளித்தது. அவர்கள் டெல்லிக்குதிரும்பிசோனியாவிடம்நடந்ததை விளக்கினர். இது தொடர்பாக அவர்களிடம் சோனியா எழுத்துப்பூர்வமான அறிக்கையை கேட்டுள்ளார்.

ஜெய்ப் பூரில் நடந்த சம்பவம் ஒழுங்கீனமானது என கருதுகிற சோனியா, அசோக் கெலாட் மீது கடும் அதிருப்தியில் உள்ளார் என தகவல்கள் கூறுகின்றன.

ராஜஸ்தானில் கட்சி தலைமையை எதிர்த்து போர்க்கொடி உயர்த்தி நிபந்தனை விதித்தவர்களுக்கு அசோக் கெலாட் பின்னணியில் இருந்தார் எனக் கருதப்படுகிறது. இந்த நிலையில், அவரது தீவிர ஆதரவாளர்களான மந்திரி சாந்தி தாரிவால், ராஜஸ்தான் காங்கிரஸ் தலைமை கொறடா மகேஷ் ஜோஷி உள்ளிட்டவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கைஎடுக்கமேலிடதலைவர்கள், கட்சிதலைமைக்கு இன்று (புதன்கிழமை) பரிந்துரைப்பார்கள் என்ற எதிர்பார்ப்பு கட்சிக்குள் நிலவுகிறது.

### கார்கேவுக்கு வாய்ப்பு?

ராஜஸ்தான் நிகழ்வின் பின்னணியில் அசோக் கெலாட் இருப்பதாக கருதி அவர் மீது சோனியா கடும் அதிருப்தியில் உள்ளதால், காங்கிரஸ் தலைவர் தேர்தலில் இது எதிரொலிக்கும், அசோக் கெலாட்டுக்கு தலைவர் பதவி எட்டாக்கனியாகி விடும் என கூறப்படுகிறது. இந்த சூழ்நிலையில், கட்சியின் மூத்த தலைவர்களான மல்லிகார்ஜுன கார்கே, கமல்நாத், திக்விஜயசிங், சுஷில் குமார் ஷிண்டே, முகுல் வாஸ்னிக், குமாரி செல்ஜா ஆகியோரது பெயர்கள் காங்கிரஸ் தலைவர் பதவிக்கு மேலிடத்தால் இப்போது பரிசீலிக்கப்படுவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.





# டொலருக்கு நிகரான இந்திய ரூபாவின் மதிப்பு சதமடிப்பதைத் தடுக்க வேண்டும்

## மோடியிடம் காங்கிரஸ் வேண்டுகோள்

புதுடெல்லி, செப்.28

டொலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு சதமடிப்பதை பிரதமர் மோடி தடுக்கவேண்டும் என காங்கிரஸ் கட்சி

அமெரிக்க டொலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு கடந்த சில நாள்களாக சரிந்து வருகிறது. எனினும் டொலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு இன்று 9 காசுகள் அதிகரித்துள்ளது. அ டொலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு கடந்த சில நாட்களாக தொடர்ந்து சரிந்து வருகிறது. கடைசியாக கடந்த 24 ஆம் திகதி 30 காசுகள் சரிந்து டொலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு ரூ.81.09 ஆக இருந்தது. இது நேற்று முன்தினம் 58 காசுகள் வீழ்ச்சியடைந்தது. அதன்படி டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு ரூ.81.67 ஆக சரிந்தது. இது முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு வீழ்ச்சி ஆகும். கடந்த 4 நாள்களில் 193 காசுகள் சரிந்திருப்பதாக நிதியமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதற்கிடையே, டொலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு இன்று 9 காசுகள் அதிகரித்துள்ளது. இதன்மூலம் டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு 81.58 ஆக உயர்ந்துள்ளது.

இந்நிலையில், தலைநகர் டெல்லியில் உள்ள காங்கிரஸ் அலுவலகத்தில் செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது. அப்போது பேசிய அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் சுப்ரியா ஷ்ரேனட் கூறுகையில், அமெரிக்கா டொலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு 82 ரூபாயை நெருங்கியுள்ளது. எனவே ரூபாய் மதிப்பு சதமடிப்பதை (நூறை எட்டுவதை) பிரதமர் மோடி தடுக்கவேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

# இந்திய கல்விசார் ஆய்வு மன்றத்துடன் தென்கிழக்கு பல்கலை உடன்படிக்கை







(நூருள் ஹுதா உமர்)

அண்மைக்காலமாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் உயர் கல்வியை சர்வதே. மயப்படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றது. பல்கலைக்கழக உபவேந்தர் பேராசியர் ஏ. றமீஸ் தலைமையில் பல்கலைக்கழக சர்வதேச விவகாரங்களுக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.ஏ. றியாட் ரூளி இதற்கான முழு முயற்சியில் ஈடுபட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக சர்வதேச விவகாரங்களுக்கான அலுவலகம் சர்வதேச ரீதியாக செயற்படுகின்ற பல்கலைக்கழகங்கள், கல்வி மற்றும் ஆய்வு சார்ந்த அமைப்புக்களுடன் புரிந்துணர்வு உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டு, அவற்றினை பயனுள்ளவகையில் நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றது. அதிலொரு கட்டமாக இந்திய கல்விசார் ஆய்வு மன்றத்துடனான (Indian Academic Research Association) சந்திப்பும் உடன்படிக்கையும் செவ்வாய்க்கிழமை இணையவழி ஊடாக இடம்பெற்றது.

இவ்வுடன்படிக்கைக்கான ஆரம்பகட்ட முன்னெடுப்புக்களை தென்கிழக்குப் பல்கலைக்கழகச் சந்தைப்படுத்தல் முகாமைத்துவத் துறைத் தலைவர் பேராசிரியர் எம்.பீ.எம். இஸ்மாயில் மேற்கொண்டிருந்தார்.

இந்நிகழ்வில் பல்கலைக்கழக உபவேந்தர், பல்கலைக்கழக சர்வதேச விவகாரங்களுக்கான அலுவலகத்தின் பணிப்பாளர், இந்திய கல்விசார் ஆய்வு மன்றத்தின் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர். இந்திய கல்விசார் ஆய்வு மன்றமானது இந்தியாவிலுள்ள பெரும்பாலான அரச பல்கலைக்கழக கல்வியலாளர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு அமைப்பாகும். இவ்வமைப்புடனான புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் கற்றல், கற்பித்தல், ஆய்வு மற்றும் புத்தாக்கத்துறைகளில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக ஆசிரியர்களும் மாணவர்களுப பயனடைவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதன்போது ஆசிரிய–மாணவ பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டங்கள், ஆய்வு மாநாடுகள், ஆய்வு வெளியீடுகள் சான்றிதழ் மற்றும் டிப்ளோமாக பாடநெறிகள், ஆசியா மற்றும் மாணவர் பயிற்சிகள் உள்ளிட்ட பல ஒன்றினைந்த வேலைத் திட்டங்களை துரிதகதியில் நடைமுறைப்படுத்துவதற்கும் இணக்கம் காணப்பட்டது.

இதுபோன்ற புரிந்துணர்வு உடன்படிக்கைகளை பேலும் விரிவுபடுத்துவதற்கு பல்கலைக்கழக சர்வதேச விவகாரங்களுக்கான அலுவலகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது. இதன்படி ரஷ்யா, துருக்கி மலேசியா ஆகிய நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களுடன் எதிர்வரும் ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் மேலும் பல புரிந்துணர்வு உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பில் நேற்று மாவட்ட இலக்கிய விழா







(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

கலாசார அலுவல்கள் திணைக்களமும் மட்டக்களப்பு மாவட்டச் செயலகமும் இணைந்து நடத்திய 2022 ஆம் ஆண்டிற்கான மாவட்ட இலக்கிய விழா மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சனி ஸ்ரீகாந்த் தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை மிகச் சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலக டேபா மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்விற்கு அதிதிகளாக மாவட்ட உதவி அரசாங்க அதிபர் ஏ.நவேஸ்வரன், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வீ.வாசுதேவன், மாவட்ட எழுத்தாளர் சங்க தலைவர் கலாநிதி முருகு தயாநிதி மற்றும் மாவட்ட கலாசார உத்தியோகத்தர் எம்.ஏ.சீ.ஜெய்னுலாப்தீன் உள்ளிட்ட மேலும் பல அதிகாரிகளும் கலந்து சிறப்பித்துள்ளனர்,

மூவினங்களின் பாரம்பரியம், தொன்மை மற்றும் பல் மத கலாசார வெளிப்பாடுகள், விழுமியங்களை வெளிப்படுத்தும் பண்பாட்டு கலை கலாசார, இலக்கிய நிகழ்வுகள் இதன்போது அரங்கேற்றப்பட்டிருந்தன.

இதன் போது இலக்கிய விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்கள், இளைஞர்கள், கலைஞர்கள் மற்றும் கலை ஆர்வலர்கள் இதன்போது அதிதிகளினால் பராட்டி நினைவுச்சின்னங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

கலைஞர்கள், கலை ஆர்வலர்கள், எழுத்தாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள் என பெருந்திரளானோர் இதில் கலந்துகொண்டிருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் விழுமியங்களையும், தொன்மைகளையும், கலாசார பண்புகள் மற்றும் மட்டக்களப்பிற்கே உரித்தான கலைகள், அவற்றின்பாலெழுந்த படைப்புக்களையும் முழு உலகிற்கு அறியச்செய்வதற்கான அர்த்தமிகு நிகழ்வாக 2022 ஆம் வருடத்திற்கான மாவட்ட இலக்கிய விழா மிகச் சிறப்பாக நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.







# உயிர்தத ஞாயிறுத் தாக்குதலில் பாதிப்புந்றோருக்கு நிதி உதவி

(ந.குகதர்சன்)

கடந்த 2019 ஆம் ஆண்டு உயிர்தத ஞாயிறன்று மட்டு சியோன் தேவாலயத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் உயிர் நீத்த, காயபடைந்து சிகிச்சைபெற்று வருகின்றோரின் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு சார்ள்ஸ் மண்டபத்தில் இடம்பெற்றது. இங்கு தெரிவு செய்யப்பட்ட 90 குடும்பங்களுக்கு 30 இலட்சம் ருபா நிதி பகிரப்பட்டது.

மட்டக்களப்பு எகட் கரிடாஸ் நிறுவன இயக்குனர் அருட்தந்தை ஜேசுதாஸன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு நிதியுதவியினை வழங்கி வைத்தார்.

குண்டுவெடிப்பால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் கத்தோலிக்க பக்கள் போப் பிரான்ஸிஸ் ஆண்டகையைச் சந்தித்ததன் நிமித்தம் பதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கான நிதியுதவியை அவா அண்மையில் வழங்கி வைத்தார்.

அவரின் வேண்டுகளின் பேரில் பாதிக்கப்பட்டவர்களின் இருப்பிடங்களுக்கு சென்று வழங்குவதன் ஒரு கட்டமாக இந்நிதியுதவி மட்டக்களப்பு மாவட்டத்தில் அவரின் இலங்கை பிரதிநிதி அருட்தந்தை நெல்சனின் மேற்பார்வையில் இந்நிதியுதவி வழங்கப்பட்டது.

எகட் கரிடாஸின் கொழும்பு கிளை இயக்குனர் லோரன்ஸ் ராமநாயக்க மற்றும் சியோன் தேவாலய பிரதம போதகரின் மனைவி திருமதி ரொசான் மகேசன் மற்றும் சியோன் தேவாலய போதகர் திருகுமரன் மற்றும் குண்டு தாக்குதலில் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் , மட்டு மாவட்ட எகட் கரிடாஸின் உறுப்பினர்கள் எனப்பலர் இந்நிதியுதவி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# நினைவேந்தலில் அரசியல் கதைக்கக்கூடாது என்றால் தலைவர் மாவீரார் நாள் உரையை ஆற்றியிருக்காராம்!

## யாழ். மாநகர முதல்வர் குழுவினாலேயே திலீபனின் நினைவேந்தல் குழப்பப்பட்டது! கடுமையாகச் சாடுகின்றார் சுகாஸ்



ஈ.பி.டி.பியின் ஆதரவில் உள்ள யாழ். மாநகரசபை முதல்வர் மணிவண்ணன் குழுவினாலேயே தியாகி திலீபனின் நினைவேந்தலின்போது குழப்பத்தை ஏற்படுத்த சதி மேற்கொள்ளப்பட்டது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக பேச்சாளரான சட்டத்தரணி சுகாஷ் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். அலுவலகத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம் பெற்ற ஊடகசந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நினைவேந்தல் விவகாரம் தொடர்பாக மேலும் கருத்து வெளியிட்ட அவர் –

ஈ.பி.டி.பி மணிவண்ணன், அரச புலனாய்வுப் பிரிவினரின் இயக்கத்தில் இயங்குகின்ற ஜனநாயக போராளிகள் கட்சி மற்றும் சில வேற்று நாடுகளின் நிகழ்ச்சி நிரல்களை மேற்கொள்ளும் தரப்பினரால் நினைவேந்தலை குழப்புவதற்கு பல்வேறுபட்ட சதி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்த் தேசிய அரசியலை கடத்துகின்ற – தமிழர்களுடைய அபிலாஷைகளை முன்வைக்கின்ற – ஓர் இடமாக, தியாக தீபத்தின் நினைவேந்தல் இடத்தைப் பார்க்காமல் தமிழ்த் தேசிய அரசியலிலை நீக்கம் செய்து இந்தியாவிற்கு இருக்கின்ற வரலாற்று கடமையைத் தட்டிக் கழிக்கின்ற, மறைக்கின்ற ஒரு சதிதான் இங்கு நடந்துகொண்டு இருக்கிறது.

தியாக தீபத்தின் நினைவேந்தல் இடத்தில் அவரது அபிலாஷைகளை கதைப்பது தான் முக்கிய கடமை.

தியாக தீபத்தின் அபிலாஷைகளையும் ஐந்து அம்ச கோரிக்கைகளையும் அவ்விடத்தில் பேசாது வெறுமனே அழுது விட்டு செல்லுமாறு கூறுகின்றமை இந்தியாவைக் காப்பாற்றுகின்ற செயற்பாடு.

நினைவேந்தல்களில் அரசியல் கதைக்கக் கூடாது என்று கருதி இருந்தால் வேலுப்பிள்ளை பிரபாகரன் மாவீரர்கள் தினங்களில் தேசிய சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த தமிழ் இனத்துக்கு வழிகாட்டிய மாவீரர் நாள் உரையை ஆற்றி இருக்க மாட்டார். உண்மையில் என்ன நடந்தது என்பதை விளங் கப்படுத்த வேண்டிய கடப்பாடு எமக்கு உள்ளது. கடந்த ஆறு ஆண்டுகளாக பல்வேறு அடக்கு முறைகள் பிரயோகிக்கப்பட்டபோது தியாக தீபத்தின் நினைவேந்தலை முன்னெடுக்க எவரும் வரவில்லை.

இன்று தியாக தீபத்தை நினைவேந்துவதற்கு அடக்குமுறைகள் குறைக்கப்பட்டுள்ளதாகக் காட்டப்படுகின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் பலர் அடிபடுகின்றார்கள்.

மதத் தலைவர்கள், சிவில் அமைப்புகள், பாதிக்கப்பட்ட தரப்பினரை உள்ளடக்கிய அமைப்புகளே பொதுக்கட்டமைப்பைப் பற்றி பேச வேண்டும்.

ஈ.பி.டி.பி கட்சியின் ஆதரவில் இருக்கின்ற யாழ். மாந கர சபை முதல்வர் எவ்வாறு பொதுக் கட்டமைப்புப் பற்றி பேசலாம்?

தியாக தீபத்தின் நினைவேந்தல் வழமையாக, அவர் உயிர்நீத்த நேரமான 10.48 மணிக்கு அனுஷ்டிக்கப் படுகிறது.

இந்தவகையில், நினைவேந்தல் செய்வதற்கு ஒழுங்கமைக்கப்பட்டிருந்த இடத்தில் ஈ.பி.டி.பி கட்சியின் ஆதரவில் உள்ள மணிவண்ணன் தரப்பைச் சேர்ந்த ஜெயபாலன் என்பவர் முண்டியடித்துக் கொண்டு நல்லூரிலே 10.47 மணிக்கு தீபம் ஏற்றி இருக்கிறார்.

அதன்பின்னர் புதிய நேரத்தில் பாரம்பரிய நினைவேந்தல் குழுவினர் சரியாக 10.48 மணியளவில் நினைவேந்தலை முன்னெடுத்தனர். இங்கே நினைவேந்தலை குழப்பியது யார்?

10.46 இற்கு ஒரு காவடி வருகின்றது. வந்த காவடி மக்களை ஊடறுத்துக் கொண்டு சென்று பொதுச்சுடரையும்தாண்டிச்சென்றுதாங்கள்முதலிலேநினைவேந்தல் சுடர் ஏற்ற வேண்டும் என முண்டியடித்தனர்.

அங்கேதான் நேற்றைய குழப்பத்திற்கான அடிக்கல் நாட்டில் வைக்கப்பட்டது.

வேலன் சுவாமிகளும், அடியாள்களை வைத்து இயங்குகின்ற முதல்வர் மணிவண்ணன் தரப்பினரும் ஜனநாயகப் போராளிகள் கட்சியினரும் தான் அந்தக் காவடியை அழைத்துக் கொண்டு வந்தார்கள் – என்றார்.

அதேநேரத்தில், ஜனநாயக போராளிகளது வாட்ஸப் குழுமத்தில், 'கஜேந்திரன் எப்படியும் நாளைக்கு ஆள்களை கொண்டு வந்து விடுவான், நாங்கள் எப்படியாவது எங்கட ஆள்களை செற்பண்ணி அவையிட்ட இருந்து மைக்க அடிச்சென்றாலும் பறிக்க வேணும், போராளிகளுக்கு களங்கம் வந்தாலும் அது ஆறு மாசத்துக்குள் போய்விடும். ஒருத்தரும் அதைப்பற்றி யோசிக்க தேவையில்லை, மணி நீங்கள் அந்த காவடிக்கு இரண்டு பேரை செட் பண்ணுங்கோ' என கடந்த 25 ஆம் கதைக்கப்பட்டது எனத் தெரிவித்து அதற்கான ஆதாரங்களையும் சுகாஸ் வெளியிட்டிருந்தார்.

# 3 அரசியல் கைதிகளின் குற்ற ஒப்புதல் வவுனியா மேல் நீதிமன்றம் நிராகரிப்பு!

அரசியல் கைதிகள் மூவரின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நேற்று (செவ்வாய்க்கிழமை) வவுனியா மேல் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட கணேசன் தர்சன், சுலக்சன், திருவருள் ஆகியோரின் வழக்கு விசாரணை வவுனியா மேல்நீதிமன்றத்தில்நீதிபதிகளானமா. இளஞ்செழியன், இராமகமலன் கண்ணன் ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே 2013 ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு தொடர்பான தொடர் விளக்கத்துக்காக எதிர்வரும் மாதம் 14 ஆம் திகதி வழக்கு திகதியிடப்பட்டுள்ளது. இந்த அரசியல் கைதிகளுக்காக சிரேஷ்ட சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் ஆஜராகியிருந்தார். இந்த அரசி யல் கைதிகளுக்கு கடந்த சில மதங்களுக்கு முன்னர் அமைச்சர் ரோகான் ரத்வத்த துப்பாக்கி முனையில் அச்சுறுத்தினார் என்ற சர்ச்சை ஏற்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# அம்பாறையில் முதலைகள் பெருக்கம் காணாமல் போகின்றன கால்நடைகள்







(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக வேளாண்மை செய்கை ஆரம்பமாகி உள்ள நிலையில் அதிகளவிலான முதலைகள் வெளியேறி மக்கள் குடியிருப்புகளுக்குள் செல்கின்றன. தற்போது மாவடிப்பள்ளி பாலம் சம்மாந்துறை பகுதி ஒலுவில் பகுதி நிந்தவூர் மருதமுனை பெரியநீலாவணை நற்பிட்டிமுனை பாண்டிருப்பு கிட்டங்கி நாவிதன்வெளி உள்ளிட்ட பகுதிகளை அண்மித்த ஆற்றை விட்டு இரவிலும் பகலிலும் முதலைகள் வெளியேறுவதனால் வீதியால் செல்லும் பயணிகள் மற்றும் பாதசாரிகள் அச்சத்துடனேயே பயணத்தை மேற்கொள்கின்றனர்.

குறிப்பாக இரவு நேரங்களில் அதிகமான சுமார் 9,5, 4அடி நீளமுடைய முதலைகள் வெளியேறுகின்றன என மக்கள் தெரிவிக்கினறனர்.

மேலும் இம்மாவட்டத்தில் உள்ளிட்ட களப்புக்கள் போன்ற இடங்களிலும் முதலை அச்சறுத்தல் தொடர்ந்து வருகின்றது. மேற்படி பகுதிகளில் உள்ள வாவிகள், குளங்களிலும் முதலைகளின் பெருக்கம் அதிகரித்து காணப்படுகிறது.

தற்போது சிறுபோக வேளாண்மை செய்கை ஆரம்பமாகி உள்ளதனால் வயல் நிலங்கள், கால் வாய்களை அண்டிய பகுதியில் நீருக்காக குளங்களை நாடிச் செல்லும் ஆடு, மாடுகள் உள்ளிட்ட கால்நடைகள் முதலைகளுக்கு இரையாகுகின்றன. இப்பகுதியில் இரவிலும் பகலிலும் முதலைகள் வெளியேறுகின்றமையாக் கட்டாக்காலிகளாக இப்பகுதியில் திரியும் மாடுகளே இம்முதலைகளுக்கு இரையாகுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது. மேற்படி பகுதிகளில் முதலைகளின் பெருக்கம் சம்பந்தமாக அறிவுறுத்துதல்கள், எச்சரிக்கை பலகைகள் உரிய இடங்களில் இதுவரையும் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. முதலை அபாயம் தெரியாமல் இப்பகுதியில் மக்கள் பயணிப்பதால் முதலையின் பிடிக்குள் அகப்படும் சாத்தியம் உள்ளது.

மேலும் இவ்வருடம் ஜூன் மாதப் பகுதியில், அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட களியோடை ஆற்றின் ஓரத்தில் தனது வளர்ப்பு மாட்டுக்குப் புல் வெட்டுவதற்காகச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் முதலை தாக்கியதில் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் பதிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.09.2022இல் வெளியிடப்பெற்றது.